DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | எல்லப்பன் |
| Father / Husband Name | முனுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 22.**05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒழையூர் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 15.04.2022 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு நான் ஒழையூர் பேருந்து நிலையத்தில் இருந்த போது எங்கள் ஊரை சேர்ந்த டில்லி என்பவர் புக்கத்துறையில் இருந்து எக்சல் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது உத்திரமேரூரில் இருந்து புக்கத்துரை நோக்கி சென்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். விபத்தில் டில்லி என்பவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். விபத்தில் இறந்தவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. வழக்கில் இறந்துபோன டில்லி என்பவர் எனது ஊர்காரர் ஆவார். விபத்து ஏற்பட்டதை நான் சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் உத்திரமேரூரில் இருந்து புக்கத்துறை வரும் போது இடதுபுறம் ஆகும். நான் ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருகிறேன் என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.